மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்
வலங்கைமான்.

**முன்னிலை :– திரு. P. ஜேசுபாலன், M. A., B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்
வலங்கைமான்.

2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27 ம் நாள்திங்கள்கிழமை

**ஆண்டு பட்டிகை வழக்கு எண். 17/2025**

**குற்ற எண். 9/2025**

**CNR No. TNTV09-000288-2025**

**அரசுக்காக**

காவல் உதவி ஆய்வாளர்,
வலங்கைமான் காவல் நிலையம்,
திருவாரூர் மாவட்டம். ... குற்றமுறையீட்டாளர்.

// எதிர்//

1. கபிலன் (A1) (20/2026),
   த/பெ. முருகானந்தம்

2. முகிலன் (A2) (19/2026)
   த/பெ. வெங்கடேசன்

1 , 2 எதிரிகளின் வசிப்பிடம்
கீழத்தெரு, அவிச்சாகுடி
வலங்கைமான் தாலுக்கா ,
திருவாரூர் மாவட்டம். ...எதிரிகள்.

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:15:03 +0530

## 2019 ம் ஆண்டு குற்றவியல் நடைமுறை விதிகள், விதி 106 ன் கீழ் படியான விபரங்கள்

<table>
<tr><th>Sl. No.</th><th>Name of the Complaint</th><th colspan="2">Name of the accused</th><th>Date of Arrest</th><th colspan="2">Date of Release</th></tr>
<tr><td>(i)</td><td>State Rep. By<br>The Inspector of Police,<br>Valangaiman.,</td><td colspan="2">A1. Kabilan<br>S/o Muruganantham,<br>A2. Mukilan<br>S/o Venkadesan</td><td>07.01.2025<br><br>07.01.2025</td><td colspan="2">09.01.2025<br><br>09.01.2025</td></tr>
<tr><td rowspan="2">(ii)</td><td rowspan="2">Date of filling of the complainant/ final report in the court</td><td colspan="2">Filing of Complainant</td><td colspan="3">Taken on file</td></tr>
<tr><td colspan="2">07.01.2025</td><td colspan="3">02.05.2025</td></tr>
<tr><td>(iii)</td><td colspan="3">Date of committal of the cases to the court of sessions</td><td colspan="3">: Nil</td></tr>
<tr><td>(iv)</td><td colspan="3">Date of questioning of the accused U/s. 228, 240, 246 and 251 as the case may be</td><td colspan="3">: 09.07.2025</td></tr>
<tr><td>(v)</td><td colspan="2">Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior courts except routine petitions like petitions U/s. 317 of the code.</td><td>Crl.M.P.No.</td><td>Date of filing</td><td colspan="2">Result</td></tr>
<tr><td></td><td colspan="2">Nil</td><td>Nil</td><td>Nil</td><td colspan="2">Nil</td></tr>
<tr><td rowspan="4">(vi)</td><td>Date of Examination in Chief and Cross</td><td colspan="2">Name of the Examination</td><td>Date of Chief</td><td colspan="2">Date of Cross</td></tr>
<tr><td>P.W.1</td><td colspan="2">Gomathi</td><td>01.11.2025</td><td colspan="2">01.11.2025</td></tr>
<tr><td>P.W.2</td><td colspan="2">Raja</td><td>01.11.2025</td><td colspan="2">01.11.2025</td></tr>
<tr><td>P.W.3</td><td colspan="2">Anusiya</td><td>01.11.2025</td><td colspan="2">01.11.2025</td></tr>
</table>

JESU BALAN
Digitally signed by JESU BALAN
Date: 2026.04.27 16:15:10 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| | P.W.4 | Priththa | 01.11.2025 | 01.11.2025 |
| | P.W.5 | Chandira | 01.11.2025 | 01.11.2025 |
| | P.W.6 | Regupathi | 01.11.2025 | 01.11.2025 |
| | P.W.7 | Vijayakumar | 01.11.2025 | 01.11.2025 |
| | P.W.8 | Subramanian | 01.11.2025 | 01.11.2025 |
| (vii) | Date of examination of the accused U/s. 313 of the Code | | | 17.11.2025 |
| (viii) | Details of abscondence of an accused and his appearance/Production as the case may be: | | | Nil |

| | | | | |
|---|---|---|---|---|
| (ix) | Grant of stay by superior courts and the results thereof | Sessions Court CMP No. | High Court No. and Date of stay | Result |
| | Nil | Nil | Nil | Nil |

| | | |
|---|---|---|
| முதலாவதாக | | U/s. 296(b) BNS ன் கீழ் கடந்த 05.01.2025 ந்தேதி இரவு 08.00 மணியளவில் புகார்தாரர் அவரது வீட்டிற்கு முன் நின்று கொண்டிருந்த போது எதிரிகள் இருவர் மற்றும் இளம்பிளையாளி அமுதனும் சேர்ந்து கொண்டு புகார்தாரரை தகாத வார்த்தையால் திட்டியும் அதற்கு புகார்தாரர் ஏன் தினமும் என் வாசலில் நின்று கொண்டு திட்டுகிறீர்கள் என கேட்ட புகார்தாரரை 1வது எதிரி காமக்குரோதமாக திட்டிய குற்றம். |
| இரண்டாவதாக | | U/s. 131–ன்படி, BNS 1வது எதிரி புகார்தாரரின் கீழே தள்ளியும், 2வது எதிரி, சாட்சி –2ன் மனைவி அனுசியாவை நெஞ்சில் கை வைத்து கீழே தள்ளியும் 1, 2 எதிரிகள் இருவரும் சொற்பகாயத்தை ஏற்படுத்திய குற்றம். |

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.04.27 16:15:19 +0530

| | | |
|---|---|---|
| மூன்றாவதாக | | U/s. 351(3)–ன் BNS படி மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக 1 முதல் 2 எதிரிகள் இருவரும் உங்களை இந்த ஊரை வீட்டு விரட்டிடுவோம் இல்லை என்றால் ஒரு வாரத்தில் வீட்டோடு வைத்து கொளுத்தி விடுவோம் என்று மிரட்டிய குற்றம். |
| நான்கவதாக | | U/s. பிரிவு 4 தமிழ்நாடு பெண்களுக்கெதிரான வன்கொடுமை தடுப்புச்சட்டத்தின் கீழ் 1, 2 எதிரிகள் இருவரும் புகார்தாரரின் புடவையை பிடித்து இழுத்து கீழே தள்ளி புகார்தாரரை பெண் என்று பாராமல் பெண்மைக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் நடந்து கொண்டது குற்றம். |
| எதிரிகளின் பதில்கள் | | குற்றவாளி இல்லை |
| நீதிபதியின் தீர்மானம் | | எதிரிகளின் மீதான 296(b), 351(3) BNS மற்றும் TNPHW r/w 4 குற்றச்சாட்டு நிரூபனம் செய்யப்படவில்லை. எதிரிகளின் மீதான 131 BNS ன் கீழான குற்றச்சாட்டு நிரூபனம் செய்யப்பட்டுள்ளது. |
| தண்டனை அல்லது உத்தரவு | | 1, 2 எதிரிகள் பாரதிய நியாக் சன்ஹிதா பிரிவுகள் 296(பி), 351(3) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களுக்கெதிரான வன்கொடுமை தடுப்புச்சட்டத்தின் கீழ் குற்றவாளிகள் அல்ல என்று பாரதிய நாகரிக் சுரக்சா சன்ஹிதா பிரிவு 271(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. 1, 2 எதிரிகளின் மீதான பாரதிய நியாக் சன்ஹிதா பிரிவு 131 ன் கீழ் தண்டனை தீர்ப்பு வழங்கி பாரதிய நாகரிக் |

JESU BALAN
Digitally signed by JESU BALAN
Date: 2026.04.27 16:15:26 +0530

| | | |
|---|---|---|
| | | சுரக்சா சன்ஹிதா பிரிவு 271(2)ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. |

இவ்வழக்கு என் முன்பாக 18.04.2026 அன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை1, அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு.எம்.முரளி மற்றும் திரு.பி.திருநாவுக்கரசு ஆகியோர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாத, பிரதிவாதங்களைக் கேட்டும். இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து, ஆவணங்களை ஆராய்ந்தும், இறுதி பரிசீலனைக்குப் பின், இன்று 27.04.2026 இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

**/தீர்ப்புரை/**

இவ்வழக்கானது காவல் உதவி ஆய்வாளர், வலங்கைமான் காவல் நிலைய குற்ற எண்.9/2025 –ன் கீழ் 1, 2 எதிரிகளின் மீது பிரிவுகள் 296(b), 131, 351(3) பாரதிய நாயக் சன்ஹிதா மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களுக்கெதிரான வன்கொடுமை தடுப்புச்சட்த்தின் கீழான குற்றம் எதிரிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின் பேரில் தொடரப்பட்டதாகும்.

**1. குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்: –**

அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றயிறுதி அறிக்கையில் இருந்து தெரியவரும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு, வலங்கைமான் காவல் நிலைய சரகம், நல்லூர் அவிச்சாகுடி கீழத்தெருவை

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:15:33 +0530

சேர்ந்த இவ்வழக்கின் புகார்தாரர் குடும்பத்திற்கும் எதிரியின் குடும்பத்திற்கும் இடையே முன்விரோதம் இருந்து வந்துள்ளதாகவும், 1 முதல் 3 எதிரிகள் முன் விரோதம் காரணமாக தினமும் குடித்துவிட்டு புகார்தாரரை தகாத வார்த்தைகளால் திட்டுவது வழக்கம் என்றும், இந்நிலையில், கடந்த 05.01.2025 ஆம் தேதி இரவு 08.00 மணியளவில் புகார்தாரர் அவரது வீட்டிற்கு முன் நின்று கொண்டிருந்த போது எதிரிகள் புகார்தாரரை தகாத வார்த்தையால் திட்டியுள்ளதாகவும், அதற்கு புகார்தாரர் ஏன் தினமும் என் வாசலில் நின்று கொண்டு திட்டுகிறிர்கள் என கேட்ட புகார்தாரரை 1வது எதிரி காமக்குரோதமாக திட்டியும் புகார்தாரரின் புடவையை பிடித்து இழுத்து கீழே தள்ளி அவமானப்படுத்தியும் சத்தம் கேட்டு வந்த சாட்சி –2 ஐ, 2வது எதிரி நீ என்ன இவலுக்கு சப்போட்டா உன்னை பொங்கல் முடிவதற்குள் தீர்த்து கட்டுகிறேன் என்று மிரட்டியும் சாட்சி–3 ஆன அனுசியாவை நெஞ்சில் கை வைத்து தள்ளி பெண் என்று பாராமல் அவமானப்படுத்தியும் உங்களை இந்த ஊரை வீட்டு விரட்டிடுவோம் இல்லை என்றால் ஒரு வாரத்தில் வீட்டோடு வைத்து கொளுத்தி விடுவோம் என்று மிரட்டி சென்றுள்ள எதிரிகளின் செய்கையானது 296(b), 131, 351(3) BNS மற்றும் TNPHW r/w 4 குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதே அரசு தரப்பு வழக்காகும்.

2. <u>வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட விவரம்:</u>

BNSS பிரிவு 193(2) பிரிவின் கீழான இவ்வழக்கின் குற்றயிறுதி அறிக்கையானது வலங்கைமான் காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளரால்

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:15:40 +0530

கடந்த 07.01.2025–ம் சட்டபிரிவுகள் 296(b), 131, 351(3) BNS மற்றும் TNPHW r/w 4–ன் கீழ் இவ்வழக்கின் எதிரிகள் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி குற்றயிறுதி அறிக்கையானது கடந்த 02.05.2025 தேதி இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு BNSS பிரிவு 227–ன் கீழ் எதிரிக்கு சம்மன் அனுப்பட்டது.

3. <u>1 மற்றும் 2 எதிரிளுக்கு BNSS பிரிவு 230 ன் கீழ் நகல் வழங்கப்பட்ட விவரம்</u>

1 மற்றும் 2 எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலை ஆனவுடன் அரசுத்தரப்பு ஆவணங்களின் நகல்கள் அவருக்கு BNSS 230–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

4. <u>எதிரிகளின் மீது வனைப்பட்ட குற்றச்சாட்டுகளின் விவரம்:</u>

**4.1.** எதிரிகளிடம் குற்றம் குறித்து வினவியபோது அவர் குற்றத்தினை மறுத்துள்ளார். இரு தரப்பும் கேட்கப்பட்டு ஆவணங்கள் அனைத்தும் பரிசீலனை செய்த பின்னர் இந்நீதிமன்றம் பிரிவு 293 ன் படி எதிரிகள் மீது 296(b), 131, 351(3) பாரதிய நாயக் சன்ஹிதா மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களுக்கெதிரான வன்கொடுமை தடுப்புச்சட்டத்தின் கீழ் அதனை விளக்கி வினவியபோது அவர்கள் தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்று மறுத்துரைத்தார்கள். எனவே, அரசு தரப்பு சாட்சியங்களை விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டது.

**4.2** இந்த வழக்கில், எதிரிக்கு எதிரான குற்றங்களை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் 1 முதல் 8 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, 1 முதல் 7 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. அரசு தரப்பில் சான்றுபொருட்கள்

JESU BALAN
Digitally signed by JESU BALAN
Date: 2026.04.27 16:15:47 +0530

எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5. <u>அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் பின்வருமாறு –</u>

**5.1. அசா.1 கோமதி** தனது சாட்சியத்தில், தான் இந்த வழக்கின் புகாரினை முகிலன், கபிலன் மற்றும் அமுதன் மீது கொடுத்துள்ளேன் என்றும், ஆஜர் எதிரிகளில் முகிலன் மற்றும் கபிலன் ஆஜராகியுள்ளார் என்றும், 1 வது மாதம் 5 வது தேதி 2025 வது வருடம் இரவு 08.00 மணியளவில் தான் தன் வீட்டில் இருந்தேன் என்றும், தன் இரண்டு பெண் பிள்ளைகள் ப்ரீத்தா மற்றும் ப்ரீத்தியும் மற்றும் 60 வயதுடைய தன்னுடைய தாயார் சந்திராவும் வீட்டில் இருந்தோம் என்றும், ஆஜர் எதிரிகளும் அமுதனும் அந்த நேரத்தில் தன் வீட்டு வாசலில் நின்று குடிபோதையில் தங்களை இழுத்து தன் தாயார் சந்திராவை கபிலாவின் அப்பா முருகானந்தம் 15 நாட்களுக்கு முன்பு அடித்ததற்கு தாங்கள் வழக்கு கொடுத்ததற்காக தன் வீட்டு வாசலில் நின்று எதிரிகளும் அமுதனும் தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும், அந்த வார்த்தையை நீதிமன்றத்தில் உங்களால் சொல்லமுடியுமா என்றால் முடியாது எனவும், தான் ஏன் தேவையில்லாமல் பிரச்சனை செய்கிறீர்கள் என்று அவர்களை பார்த்து கேட்டதாகவும், அப்போது தனது சேலையை பிடித்து இழுத்தார் என்றும், யார் தனது சேலையை பிடித்து இழுத்தார் என்றால் முகிலன் தான் தனது சேலையின் மேல் தலைப்பு பகுதியை பிடித்து இழுத்ததாகவும், மேலும் கபிலனும் அமுதனும் தனது அப்பா மீது எப்படி கேஸ் கொடுத்தீர்கள் என்று திட்டினார்கள் என்றும், உங்க அப்பா அடித்ததனால் தான் தாங்கள் கேஸ் கொடுத்தோம் என்று சொன்னதும் தன்னை ஊரை விட்டு விரட்டுவதாக அமுதனும் கபிலனும் பேசினார்கள் என்றும், தன்னை

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:15:54 +0530

சேலையை பிடித்து இழுத்ததில் தனக்கு காயம் ஏற்பட்டதா என்றால் இல்லை எனவும், நடந்த சம்பவத்தை பீரீத்தா, பீரீத்தி, அனுசியா, ராஜா, சந்திரா ஆகியோரும் பார்த்தார்கள் என்றும், ராஜா இதுகுறித்து எதிரிகளை கேட்டபோது பெண்கள் இருக்கும் இடத்தில் ஏன் பிரச்சனை செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு ஆஜர் எதிரிகள் அவர்களிடமும் அவளுக்கு நீ என்ன சப்போட்டா என்று சண்டைக்கு போனார்கள் என்றும், இதுகுறித்து தான் போலீசில் புகார் கொடுத்ததாகவும், நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனு தான் கொடுத்ததுதான் என்றும், அதிலுள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், புகார் மனு **அ.சா.ஆ.1 ஆக** குறியீடு செய்யப்பட்டதாகவும், போலீசார் தன்னை விசாரித்தனர் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**5.2. அ.சா.2 ராஜா** தனது சாட்சியத்தில், அ.சா.1 தனது சித்தப்பா மகள் அக்கா முறை ஆவார் என்றும், 05.01.2025 அன்று இரவு 08.00 மணியளவில் தன் அக்கா கோமதி வீட்டின் வாசலில் சம்பவம் நடைபெற்றது தான் எதிர் வீட்டில் குடியிருந்ததாகவும், தினமும் எதிரிகளும் அமுதனும் குடிபோதையில் அக்கா வீட்டு வாசலில் இருந்து முன்விரோதத்ததை மனதில் வைத்துக்கொண்டு வெட்டிவிடுவேன் குத்திவிடுவேன் என்றும் கெட்ட வார்த்தைகளாலும் அவர்களை திட்டிதாகவும், பொங்களுக்குள் உங்களை தீர்த்துவிடுவேன் என்று கூறினார்கள் என்றும், சம்பவ தினத்தன்று தான் தன் வீட்டில் தான் இருந்தபோது சத்தம் கேட்டது வெளியில் வந்து தான் பார்த்தேன் என்றும், அப்போது ஆஜர் எதிரிகளும் அமுதனும் அங்கு நின்று கெட்ட வார்த்தைகளால் பேசினார்கள் அந்த வார்த்தை என்னவென்றால் "

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:16:01 +0530

புண்டா மகனே, தேவுடியா மகனே" என்று பேசி என்னைக்காக இருந்தாலும் உங்களை எல்லாம் கொலை பண்ணிடுவேன் என்று மிரட்டினார் என்றும், தன் அக்கா மகளை பார்த்து இவர்கள் தகாத வார்த்தைகளால் பேசியதால் தனக்கே அசிங்கமாக இருந்ததாகவும், தான் ஏன்பா இப்படி சத்தம் போடுகிறீர்கள் என்றும் தினமும் இப்படி பண்ணுகிறீர்கள் என்றும் அவர்களை பார்த்து கேட்டதாகவும், கபிலன் முகிலன், அமுதன் மூவரும் என் அப்பாவை மாட்டி விட்டீல உன்னைதான்டா தேடிகிட்டிருக்கேன் என்று சொன்னார்கள் என்றும், தான் பேசிக்கொண்டிருக்கும் போதே முகிலன் தன் மனைவியை மார்புப் பகுதியில் கையை வைத்து தள்ளினார் என்றும், தனக்கு ஒன்றும் செய்யமுடியாத நிலையில் இருந்தேன் எனவும், முன்விரோதம் காரணம் தங்களுக்குள் இருந்ததாகவும், இந்த சம்பவத்தின் 15 தினங்களுக்கு முன்பே முன்விரோதம் இருந்ததாகவும், கோமதியை கெட்ட வார்த்தை சொல்லி பேசிய பிறகு என்ன நடந்தது என்றால் தன் அக்கா கோமதியை வெளியில் வந்து ஏன் இப்படி பேசுகிறீர்கள் என்று கேட்டதற்கு கபிலன் தன் அக்காவின் சேலையை பிடித்து இழுத்தார் என்றும், இந்த சம்பவத்தை தன் குடும்பத்தார் அனைவரும் பார்த்தார்கள் என்றும், யார் யார் என்றால் தன் சின்னம்மா சந்திரா, அக்கா மகள்கள் ஆகியோரும் பார்த்தார்கள் என்றும், இது குறித்து தன் அக்கா, தனது மனைவி தாங்கள் அனைவரும் புகார் கொடுத்தோம் என்றும், போலீசார் தங்களை விசாரித்தார்கள் என்றும், எதிரிகளும் தங்கள் மீது வழக்கு கொடுத்துள்ளார்கள் என்றும், இன்று நீதிமன்றத்திற்கு சாட்சி கூற வந்திருந்த நிலையில் கபிலன் தன்னை கையை அசைத்து நாக்கை

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:16:08 +0530

துறுத்தி மிரட்டினார் என்று சாட்சியமளித்துள்ளார்.

**5.3. அ.சா.3** அனுசியா தனது சாட்சியத்தில் அ.சா.2 தனது கணவர் ஆவார் என்றும், அசா.1 கோமதி தனது நாத்தனார் ஆவார் என்றும், ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், கபிலன், முகிலன், அமுதன் மீது தாங்கள் இவ்வழக்கினை கொடுத்துள்ளதாகவும், கடந்த 05.01.2025 அன்று இரவு 08.00 மணிக்கு தான் குழந்தை பிறந்த சமயத்தில் தனது வீட்டில் இருந்தேன் எனவும், தன் வீடு என்பது தன் நாத்தனார் வீட்டையும் சேர்த்துதான் கூறுகிறேன் என்றும், தனது வீடும் தனது நாத்தனார் வீடும் எதிர்எதிர் வீடுதான் எனவும், நாத்தனார் வீட்டு வாசலில் சத்தம் கேட்டது என்றும், ஆஜர் எதிரிகளும் அமுதனும் தன் நாத்தனார் வீட்டை பார்த்து கெட்ட வார்த்தையால் பேசிக் கொண்டிருந்தனர் என்றும், அந்த வார்த்தைகளை சொல்ல முடியுமா என்றால் முடியாது என்றும், கோமதி அண்ணிக்கு 2 பெண் பிள்ளைகள் வயதுக்கு வந்த பிள்ளைகள் இருக்கிறார்கள் இந்த நிலையில இப்படி பேசுகிறீர்களே என்று கேட்டபோது கபிலன் கோமதி அண்ணியை சேலையின் தலைப்பு பகுதியை பிடித்து இழுத்து தள்ளினார் என்றும், உடனே தனது கணவர் ஏன்டா வீட்டுல ஆம்பல இல்லை பொம்பளங்க மட்டும்தான் இருக்காங்க என்று கேட்டார் மேலும் எதிரிகள் சத்தம் போட்டார்கள் என்றும், தானும் இதுகுறித்து கேட்டேன் என்றும், அதற்குள் முகிலனும் கபிலனும் தன் கணவரை பார்த்து பொங்கலுக்குள் உனது காலையோ கையையோ எடுத்து விடுவேன் என்று மிரட்டினார்கள் என்றும், தான் தன் கணவர் மட்டும்தானே இருக்கிறார் வேறு ஆண்கள் யாரும் இல்லையே என்று

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:16:16 +0530

கேட்டேன் அதற்கு முகிலன் தனது இடது தோள்பட்டை கை வைத்து தள்ளினார் என்றும், அந்த நேரத்தில் தனது இரண்டு மாத குழந்தையை அந்த பக்கத்தில் தான் வைத்திருந்ததாகவும், அதனுடன்தான் போராடினேன் என்றும், அக்கம்பக்கத்தாரான கோமதி, ப்ரீத்தி, சந்திரா ஆகியோரும் பார்த்தார்கள் என்றும், தனது நாத்தனார் வீட்டில் ஆண்கள் இல்லாத சமயத்தில் தனது கணவர் மட்டும் இருந்த நேரத்தில் எதிரிகள் இதுபோன்று நடந்த கொண்டார்கள் என்றும், இன்று வரை அப்படிதான் நடந்து வருகிறார்கள் என்று கூறுகிறார் என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்று சாட்சியமளித்துள்ளார்.

**5.4. அ.சா.4 ப்ரித்தா,** தனது சாட்சியத்தில் தான் மேற்படி முகவரியில் வசித்து கல்லூரியில் மூன்றாம் ஆண்டு B.A. English படித்து வருவதாகவும், அ.சா.1 கோமதி தனது அம்மா ஆவார் என்றும், அ.சா.2 ராஜா தனது மாமா ஆவார் என்றும், அ.சா.3 அனுசியா தனது மாமாவின் மனைவி ஆவார் என்றும், ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் அவர்களுடன் சேர்த்து அமுதன் பேரிலும் தன் அம்மா நடவடிக்கைக்காக புகார் கொடுத்தார் என்றும், அந்த விபரம் தனக்கு தெரியும் என்றும், கடந்த 05.01.2025 அன்று இரவு 08.00 மணியளவில் தான் தனது வீட்டில் தன் அம்மா, தங்கை மற்றும் தனது பாட்டி ஆகியோருடன் இருந்ததாகவும், கபிலன் அப்பா மீது தாங்கள் ஏற்கெனவே வழக்கு ஒன்று கொடுத்திருந்ததாகவும், அன்று இரவு தன் வீட்டு வாசலுக்கு வந்த ஆஜர் எதிரிகள் குடிபோதையில் தகாத வார்த்தைகளால் தங்களை திட்டினார்கள என்றும், அந்த வார்த்தை என்ன என்றால் அதை கூற

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:16:23 +0530

இயலாது அது மிகவும் அசிங்கமான வார்த்தை என்றும், அந்த வார்த்தைகளால் தங்களுக்கு மிகவும் அசிங்கமாக இருந்தது எனவும்,  தனது அம்மா கோமதி ஏன் இப்படி பேசுகீறீர்கள் என்று வாசலுக்கு வெளியில் வந்து கேட்டதாகவும், அப்போது கபிலன் தனது அம்மாவின் சேலையின் தலைப்பு பகுதியை பிடித்து இழுத்தார் என்றும், எதிர் வீட்டில் குடியிருக்கும்  தன் மாமா ராஜாவும் அவரது மனைவி அனுசியாவும் வந்து  ஏன் தன் அம்மாவை அடித்து தள்ளுகிறீர்கள் என்று எதிரிகளை கேட்டார்கள் என்றும்,  கேட்டவுடன் தனது மாமி அனுசியாவை முகிலன் மாமியின் நெஞ்சு பகுதியில் கையை வைத்து அடித்து கீழே தள்ளினார் என்றும், மாமாவும் இது குறித்து  ஏன் வீட்டில் தன் மைத்துனர் இல்லாதபோது பிரச்சனை செய்கிறீர்கள் என்று கேட்டதாகவும், கேட்டவுடன் ஆஜர் எதிரிகளும் அமுதனும் கையால் அடித்து நீ என்ன சப்போட்டுக்கு வரியா உன்னை வீட்டில் வைத்து கொலுத்திவிடுவேன் இன்னும் ஒரு  வாரத்தில் கொன்று விடுவேன் என்று மிரட்டினார்கள் என்றும்,  இது குறித்து புகார் கொடுத்தோம் என்றும்,  போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**5.5. அ.சா.5 சந்திரா** தனது சாட்சியத்தில்,தனது சாட்சியத்தில் அ.சா.1 கோமதி தனது மகள் ஆவார் என்றும், வீட்டில் தான் இருக்கிறேன் என்றும்,  அ.சா.2 ராஜா தன் பெரிய மாமானாரின் மகன் தனக்கு மகன் முறை ஆவார் என்றும், அ.சா.3 அனுசியா அ.சா. 2 ன் மனைவி  தனக்கு மருமகள் முறை ஆவார் என்றும், ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும்,  ஆஜர் எதிரிகளை சேர்த்து 3 பேர்கள் மீது புகார் கொடுத்திருந்தோம் என்றும், இந்த வருடம் ஜனவரி மாதம்

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:16:31 +0530

5ம் தேதி இரவு 08.00 மணி இருக்கும் தங்கள் வீட்டில் தானும் தனது பேரப்பிள்ளைகள் மற்றும் தனது மகள் ஆகியோர்கள் இருந்தோம் என்றும், ஏற்கெனவே எதிரிகளின் அப்பா முருகானந்தத்திற்கும் தனக்கும் வாய்வார்த்தை சண்டை இருந்தது அதை மனதில் வைத்துகொண்டு குடிபோதையில் அன்றிரவு வாசலுக்கு வந்து கண்ணா பின்னா என்று எதிரிகள் அனைவரும் பேசினார்கள் என்றும், வயதுக்கு வந்த பிள்ளைகள் வீட்டில் இருந்தனர் அந்த பேச்சினை என்னால் சொல்லமுடியவில்லை என்றும், தன் மகள் கோமதி வெளியில் வந்து இதுபோல் பேசுகிறீர்களே என்று கேட்டதாகவும், ஒருத்தருக்கொருத்தர் சண்டை வந்து கண்ணாபின்னா என்று அடித்துக் கொண்டனர் என்றும், கபிலன் தன் மகள் கோமதியின் சேலையை பிடித்து உருவிவிட்டார் என்றும், இத்தனையும் தன்வீட்டு வாசலில் தான் நடந்தது என்றும், தாங்கெல்லாம் பார்த்ததாகவும், பக்கத்துவீட்டாரும் பார்த்தனர் ஆனால் அவர்கள் சொல்லமாட்டார்கள் என்றும், தானும் கேட்டேன் என்றும், அப்போது தன்னையும் அறைந்தார்கள் யார் என்று தனக்கு தெரியவில்லை என்றும், இந்த சண்டையில் எதிர்வீட்டில் இருந்த ராஜாவும் இதுகுறித்து எதிரிகளிடம் கேட்டார்கள் ஆம்பளங்க இல்லாத வீட்டில் இப்படி சண்டை போடுறீங்களே என்று கேட்டதற்கு அவர்களையும் திட்டினார்கள் என்றும், ராஜாவின் மனைவி அனுசியாவின் சேலையையும் கபிலன் உருவி நெஞ்சில் அடித்ததாகவும், அப்போது அனுசியா குழந்தையுடன் இருந்தார் என்றும், இது குறித்து போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:16:40 +0530

**5.6. அ.சா.6 ரெகுபதி** தனது சாட்சியத்தில் தனக்கு வழக்கின் இருதரப்பினரையும் தெரியும் தனது ஊர்காரர்கள் என்றும், சம்பவம் தான் கேள்விபட்ட வகையில் தான் தெரியும் தனது மனைவிதான் தன்னிடம் கூறினார் என்றும், தனக்கு நேரடியாக தெரியாது என்றும், கடந்த 07.01.2025 அன்று காலை 11.00 மணிக்கு தங்கள் ஊருக்கு போலீசார் விசாரணைக்காக வந்ததாகவும், ஏற்கனவே முருகானந்தத்திற்கும் சந்திராவிற்கும் பிரச்சனை ஒன்று இருந்தது என்றும், உதவி ஆய்வாளர் சம்பவயிடத்தில் திசைகளையும் வீடுகள் குறித்த குறிப்புகளையும் குறித்துக்கொண்டார் என்றும், இந்த விசாரணையில் சம்பவத்தை பற்றியும் கேட்டார்கள் என்றும், அவர்கள் விசாரித்ததற்காக தன்னிடமும் தம்பி விஜயகுமாரிடமும் சாட்சி கையொப்பம் பெற்றார்கள் என்றும், நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், பார்வை மகசர் **அ.சா.ஆ.2 ஆக** குறியீடு செய்யப்பட்டதாகவும் போலீசார் என்னை விசாரணை செய்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**5.7. அ.சா.7 விஜயகுமார்** தனது சாட்சியத்தில் தான் மேற்படி முகவரியில் வசித்து டைல்ஸ் ஒட்டும் வேலை செய்து வருவதாகவும், தனக்கு அ.சா.1, அ.சா.2, அ.சா.3 தனது உறவினர்கள் என்றும், ஆஜர் எதிரிகள் அவர்கள் குடியிருக்கும் தெருவை சேர்ந்தவர்கள் என்றும், கடந்த 07.01.2025 அன்று காலை 11.00 மணிக்கு சம்பவயிடம் வந்த போலீசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு தொலைவு குறித்த விபரங்களை கேட்டார்கள் என்றும், படம் வரைந்தார்கள் தானும் ரெகுபதி அண்ணாவும் சாட்சியாக கையொப்பம்

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:16:47 +0530

செய்தோம் எனவும், நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டதாகவும், போலீசார் தன்னை விசாரித்தனர் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**5.8. அ.சா.8 சுப்பிரமணியன்** (புலன் விசாரணை அதிகாரி) கடந்த **06.01.2025** அன்று வலங்கைமான் காவல் நிலையத்தில் பணிப்பொறுப்பில் இருந்தபோது கோமதி என்பவர் நிலையம் ஆஜராகி புகார் ஒன்றை கொடுத்தார் என்றும், அந்த புகார் மனுவை பெற்ற தான் **07.01.2025** அன்று கபிலன், முகிலன், அமுதன் என்பவர்கள் மீது விசாரணைக்கு பின்பு நிலைய குற்ற எண் **09/2025** ச/பி **296(b), 131, 351(3) BNS** மற்றும் பிரிவு **4** தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழும் வழக்கு பதிவு செய்தேன் என்றும், மேற்படி முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.4 ஆக** குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், பின்பு இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துகொண்டு தான் இந்த வழக்கில் குற்றமுறு தாக்குதலுக்கு உள்ளான யாரும் மருத்துவமனையில் சிகிச்சை பெறவில்லை என்பதும் தெரியவந்தது என்றும், சம்பவயிடத்திற்கு கடந்த **07.01.2025** அன்று பகல் **11.00** மணிக்கு சென்றதாகவும், அவ்விடத்தினை சாட்சிகள் ரெகுபதி மற்றும் விஜயகுமார் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தேன் என்றும், சாட்சிகளிடம் அதில் கையொப்பம் பெற்றேன் என்றும், மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.5 ஆகவும்** மற்றும் பார்வை மகசர்

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:16:54 +0530

**அ.சா.ஆ.6 ஆகவும்** குறியீடு செய்யப்பட்டதாகவும், பட்டியல் சாட்சி **1** லிருந்து **7** வரை தனித்தனியே விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், சட்டப்பிரிவினை மாற்றம் செய்து அதற்கான அறிக்கையை **அ.சா.ஆ.7 ஆக** குறியீடு செய்யப்பட்டதாகவும், தனது புலன் விசாரணையில் சம்பவம் உண்மையென தெரியவந்து எதிரிகளை தேடிய நிலையில் எதிரிகளில் அமுதன் என்பவர் இளஞ்சிறார் என்றதும் தெரிய வந்தது என்றும், எதிரி கபிலன் மற்றும் முகிலனை குற்ற காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற அடைப்பு காவலுக்கு உட்படுத்தினேன் என்றும், இளம் சிறார் நீதிக்குழுமத்தில் தானே சென்று ஆஜரானார் என்று தெரிய வந்தது என்றும், இத்துடன் தனது விசாரணையில் கபிலன் மற்றும் முகிலன் இருவரின் செய்கையானது ச/பி **296(b), 351(3), 131 BNS** ன் கீழும் பிரிவு **4 TNPHW Act** ன் கீழும் தண்டிக்கத்தக்க குற்ற இறுதிஅறிக்கையினை தாக்கல் செய்தேன் என்றும், இளம்சிறாரை பொறுத்து நீதிக்குழுமத்தில் தனியாக குற்ற இறுதி அறிக்கையும் தாக்கல் செய்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**6. <u>BNSS பிரிவு 351(1) (b)ன் படியான விசாரணை: –</u>**

இவ்வழக்கில் அரசுத்தரப்பால் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிகளுக்கு பாதகமாக உள்ள சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகள் குறித்து BNSS பிரிவு 351(1)(b)–ன் கீழ் எதிரிகளுக்கு விளக்கி வினவிய போது எதிரிகள் மேற்படி சாட்சிகளின் சாட்சியம் பொய் என்று மறுத்துரைத்தார். மேலும், எதிரிகள் தங்கள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டு என தெரிவித்து பின்னிட்டு சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:17:03 +0530

**7. எதிரி தரப்பு வழக்கு:**

எதிரிகள் மீது பொய்யாக வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது என்றும், எதிரிகள் தான் குற்றத்தை செய்தார் என்று நிரூபிக்க சாட்சியம் எதுவும் இல்லை என்பது எதிரிகள் தரப்பு வாதமாகும். எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. ஆவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**8. தீர்வுக்குரிய பிரச்சனை:**

i) எதிரிகள் மீதுள்ள குற்றச்சாட்டினை அரசுத்தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபித்துள்ளதா?

ii) அவ்வாறு குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டிப்பின் எதிரிகளுக்கு கிடைக்கக்கூடிய தண்டனையின் விபரம் என்ன? என்பதே இவ்வழக்கின் தீர்வுக்குரிய பிரச்சினையாகும்.

**9. தீர்வு:**

**9.1.** இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் சம்பவம் குறித்து நீதிமன்றம் நம்பத்தகுந்த வகையிலும், எவ்வித முரண்பாடுகள் இல்லாமலும், பொருண்மையை ஒரேவிதமாக குறிப்பிட்டு அமைய வேண்டும். அந்த வகையில் இவ்வழக்கின் சாட்சியங்கள் மேற்படி வகைமுறைகளுக்கு உட்பட்டு அமைந்திருக்கிறதா? என்பதே பரிசீலிக்கப்பட வேண்டும்.

**9.2.** 1, 2 எதிரிகளின் மீதான பிரிவு 296(b)ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா என பரிசீலனை செய்கையில், அ.சா.1 தனது புகாரில், கடந்த 05.01.2025ம் தேதி இரவு சுமார்

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:17:11 +0530

08.00 மணியளவில் இவ்வழக்கின் புகார்தார் கோமதி என்பவர் தன் வீட்டின் முன்பு நின்றுகொண்டிருந்தபோது எதிரிகள் தகாத வார்த்தைகளால் திட்டியதாக கூறியுள்ளார். பின்னிட்டு, அ.சா.1 தனது நீதிமன்ற முதல் விசாரணையில், எதிரிகள் இருவரும் தன்னை தகாத வார்த்தைகளால் திட்டியதாக சாட்சியமளித்துள்ளார்.

**9.3.** காயம்பட்ட சாட்சியான அ.சா.2 தனது நீதிமன்ற சாட்சியத்தில், கடந்த 05.01.2025 ஆம் தேதியன்று இரவு 08.00 மணியளவில் எதிரிகள் முன்விரோதத்தை மனதில் கொண்டு குடிபோதையில் கெட்ட வார்த்தைகளால் திட்டினார்கள் என்று சாட்சியமளித்துள்ளார்கள். மற்றொரு காயம்பட்ட சாட்சியான அ.சா.3 அனுசியா தனது நீதிமன்ற முதல் விசாரணையில், கடந்த 05.01.2025 ஆம் தேதி இரவு 08.00 மணிக்கு எதிரிகள் தனது நாத்தனார் வீட்டை பார்த்து கெட்ட வார்த்தையால் பேசிக்கொண்டிருந்தனர் என்றும், அந்த வார்த்தைகளை சொல்ல முடியாது என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**9.4. கண்ணுற்ற சாட்சியான அ.சா.4** ப்ரீத்தா தனது நீதிமன்ற முதல் விசாரணையில், கடந்த 05.01.2025 ஆம் தேதி இரவு 08.00 மணியளவில் தான் தனது வீட்டில், தன் அம்மா, தங்கை மற்றும் தனது பாட்டி ஆகியோர்களுடன் இருந்தபோது 1வது எதிரியின் அப்பா மீது நாங்கள் ஏற்கெனவே வழக்கு கொடுத்தாகவும், அன்று இரவு வீட்டு வாசலுக்கு வந்த எதிரிகள் குடிபோதையில் தகாத வார்த்தைகளால் தங்களை திட்டியதாகவும்,

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:17:18 +0530

அந்த வார்த்தைகளை கூற இயலாது என்றும், அது மிகவும் அசிங்கமான வார்த்தை என்று சுாட்சியமளித்துள்ளார்.

**9.5.** மற்றொரு கண்ணுற்ற சாட்சியான அ.சா.5 தனது நீதிமன்ற முதல் விசாரணையில், 2025 ஆம் வருடம் ஜனவரி மாதம் 5ம் தேதி இரவு 08.00 மணியளவில் தானும், தனது பேரப்பிள்ளைகள் மற்றும் தனது மகள் ஆகியோர்கள் இருந்தபோது ஏற்கெனவே எதிரிகளின் அப்பா முருகானந்த்திற்கும் தனக்கும் வாய்வார்த்தை சண்டை இருந்தது அதை மனதில் வைத்துக்கொண்டு குடிபோதையில் அன்றிரவு வாசலுக்கு வந்து கண்ணாபின்னா என்று திட்டினார்கள் என்றும், அந்த பேச்சினை தன்னால் சொல்ல முடியாது என்றும் சாட்சியமளித்துள்ளார்கள்.

**9.6.** மேலும் அ.சா.1 தனது புகாரிலும், நீதிமன்ற சாட்சியத்திலும் 1, 2 எதிரிகள் தகாத வார்த்தைகளால் திட்டினார்கள் என்று சாட்சியமளித்துள்ளார்கள். காயம்பட்ட சாட்சிகள் மற்றும் கண்ணுற்ற சாட்சிகள் தங்களது நீதிமன்ற முதல் விசாரணையில் எதிரிகள் தகாத வார்த்தைகளால் திட்டினார்கள் என்று சாட்சியமளித்துள்ளார்கள். மேற்படி சாட்சிகளின் சாட்சியங்களை நன்கு பரிசீலனை செய்கையில், எதிரிகள் அ.சா.1 ஐ, அ.சா.1ன் வீட்டில் தகாத வார்த்தைகளால் திட்டினார்கள் என்று சாட்சியமளித்துள்ளார்கள். இந்நீதிமன்றம் BNS பிரிவு 296(b)இல் குறிப்பிட்டுள்ள விளக்கத்தையும், மாண்புமிகு உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்றத்தின் பல வழக்குகளில் வழங்கியுள்ள வழிகாட்டுதல் மற்றும் அறிவுறுத்தல்களின்படியும், மேற்படி

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:17:26 +0530

இவ்வழக்கின் அ.சா.1ன் சாட்சியத்தை கருத்தில் கொள்ளும்போதும், அரசு தரப்பு வாதத்தில் கூறுவதுபோல், ஆபாச வார்த்தைகைளை உச்சரித்தால் மட்டுமே BNS பிரிவு 296(b)ன் வரையறைகளை ஈர்த்ததாக பொருள்கொள்ள முடியாது. மாறாக BNS பிரிவு 296(b)ஐ ஈர்க்க மேற்படி ஆபாச வார்த்தைகளை பொது இடத்திலோ அல்லது அதன் சுற்றுபுறத்திலோ எதிகளால் பேசப்பட்டு, அதனால் புகார்தாரருக்கோ அல்லது பிறருக்கோ அருவருப்போ அல்லது தொல்லையோ ஏற்பட்டது என்பதற்கு இவ்வழக்கின் சாட்சிகள் எதுவும் இல்லாத நிலையில், BNS பிரிவு 296(b)ன் கீழான குற்றச்சாட்டு 1, 2 எதிரிகளுக்கு எதிராக நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**10.** 1, 2 எதிரிகளின் மீதான BNS பிரிவு 351(3) ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதாக என பரிசீலனை செய்கையில், அ.சா.1 தனது புகாரில் எதிரிகள் தங்களை இந்த ஊரைவிட்டு விரட்டி விடுவோம் இல்லை என்றால் இன்னும் ஒரு வாரத்தில் வீட்டோடு வைத்து கொளுத்திவிடுவோம் என்று மிரட்டியதாக கூறிப்பிட்டுள்ளார். பின்னிட்டு அ.சா.1 தனது நீதிமன்ற முதல் விசாரணையில், 1, 2 எதிரிகள் தன்னை ஊரை விட்டு விரட்டிவிடுவதாக பேசினார்கள் என்று சாட்சியம்மளித்துள்ளார் ஆனால் தனக்கு மிரட்டல் விடுத்தார்கள் என்று குறிப்பிட்டு எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை. காயம்பட்ட சாட்சியான **அ.சா.2** தனது நீதிமன்ற முதல் விசாரணையில், எதிரிகள் என்னைக்காக இருந்தாலும் உங்களை எல்லாம் கொலை பண்ணிடுவேன் என்று

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:17:33 +0530

மிரட்டியதாக **அ.சா.1** ன் சாட்சியத்திற்கு முரண்பட்டு சாட்சியமளித்துள்ளார். மற்றொரு காயம்பட்ட சாட்சியான **அ.சா.3** தனது நீதிமன்ற முதல் விசாரணையில், 1, 2 எதிரிகள் தனது கணவரை பார்த்து பொங்களுக்குள் அவரது காலையோ கையையோ எடுத்து விடுவோம் என்று மிரட்டியதாக சாட்சியம் அளித்துள்ளார்.

**11.** கண்ணுற்ற சாட்சியான **அ.சா.4** தனது நீதிமன்ற முதல் விசாரணையில், 1, 2 எதிரிகள் கையால் அடித்து நீ என்ன சப்போட்டுக்கு வரியா உன்னை வீட்டில் வைத்து கொளுத்திவிடுவேன் இன்னும் ஒரு வாரத்தில் கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார்கள் என்று அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.3 ன் சாட்சியத்திற்கு முரண்பட்டு சாட்சியமளித்துள்ளார். மற்றொரு கண்ணுற்ற சாட்சியான அ.சா.5 தனது நீதிமன்ற முதல் விசாரணையில், 1, 2 எதிரிகள் கொலை மிரட்டல் விடுத்ததாக குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை.

**12.** மேலும் இந்நீதிமன்றம் BNS பிரிவு 351(3)ன் வரையறை கவனமாக பார்க்கும்போது, மேற்படி அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சியத்தை நன்கு பரிசீலனை செய்கையிலும், அ.சா.1 நீதிமன்ற சாட்சியத்தில் கொலை மிரட்டல் விடுத்ததாக குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. அ.சா.1 தனது புகாரில் கொலை மிரட்டல் விடுத்ததாகவும், மேலும் அ.சா.2 மற்றும் அ.சா.4 ஆகியோர்கள் தங்களது நீதிமன்ற முதல் விசாரயையில் எதிரிகள் கொலை மிரட்டல் விடுத்ததாக குறிப்பிட்டுள்ளபோதும், அ.சா.1 முதல் அ.சா.5

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:17:47 +0530

வரையிலானவர்களை 1, 2 எதிரிகள் குற்றமுறு அச்சுறுத்தல் செய்தற்கான எந்தவொரு உட்கூறுகளையும், தங்களது சாட்சியத்தில் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. மேலும், அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானவர்கள் தங்களுக்கு 1, 2 எதிரிகளின் செய்கையால் உயிர்போகும் என்ற அச்சமோ, அல்லது பீதியோ ஏற்பட்டதாக சாட்சியம் அளிக்காத நிலையில் இந்நீதிமன்றம் 1, 2 எதிரிகளின் மீதான பாரதிய நியாக் சன்ஹிதா பிரிவு 351(3)ன் கீழான குற்றச்சாட்டு நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**13.** 1, 2 எதிரிகளின் மீதான பிரிவு 4 தமிழ்நாடு பெண்களுக்கெதிரான வன்கொடுமை தடுப்புச்சட்டத்தின் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா என பரிசீலனை செய்கையில், அ.சா.1 தனது புகாரில் 1, 2 எதிரிகள் தன் புடவை பிடித்து இழுத்து தள்ளினார்கள் என்று குறிப்பிட்டுள்ளார். பின்னிட்டு அ.சா.1 தனது நீதிமன்ற முதல் விசாரணையில், 2வது எதிரி தனது சேலையில் மேல் தலைப்பு பகுதியை பிடித்து இழுத்தார் என்று சாட்சிமளித்துள்ளார். காயம்பட்ட சாட்சியான அ.சா.2 தனது நீதிமன்ற முதல் விசாரணையில், 1வது எதிரி தன் அக்காவின் சேலையை பிடித்து இழுத்தார் என்று அ.சா.1ன் புகாருக்கும், நீதிமன்ற சாட்சியத்திற்கும் முரண்பட்டு சாட்சியமளித்துள்ளார். மற்றொரு காயம்பட்ட சாட்சியான அ.சா.3 கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆகியோர்கள் தங்களது நீதிமன்ற சாட்சியத்தில், 1வது எதிரி

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:17:55 +0530

அ.சா.1 ன் சேலையை பிடித்து இழுத்தார் என்று சாட்சிமளித்துள்ளார்கள். மாண்புமிகு உயர்நீதிமன்றம் Anbazhagan v. State என்ற வழக்கில்,

" 7. To attract offence under Section 4 of Tamil Nadu Prohibition of Harassment of Woman Act, 1998 offence must have taken place at a place particularly covered by the Section. A private dwelling house is not one of such places. Section 4 of Tamil Nadu Prohibition of Harassment of Woman Act, 1998 reads as follows:

"4. Penalty for (Harassment of Woman). — whoever commits or participates in or abets (harassment of woman) in or within the precincts of any educational institution, temple or other place of worship, bus stop, road, railway station, cinema theatre, park, beach, place of festival, public service vehicle or vessel or any other place shall be punished with imprisonment for a term which may extend to three years and with fine which shall not be less than thousand rupees".

This Court by its order dated 25.10.2010 in Crl.O.P No. 13501 of 2010 in Gouresh Mehra v. The State, has held as follows:

"This Court is of the considered opinion that the words 'any other place' found in Section 4 are to be read 'ejusdem generis'. The Tamil Nadu Prohibition of Harassment of Women Act, 1998 when originally enacted consisted of 10 Sections and came into force on 30.7.1998 The offences under Section 4- A Harassment death, Section 4- B been included under subsequent amendments of the year 2002. Confining ourselves to the offence contemplated under Section 4 and looking into the Objects and Reasons of the enactment not towards informing ourselves of the amplitude of the Act but towards understanding the idea behind it, we find that the enactment was intended as a measure to eradicate eve teasing in public places. The Act informs what would constitute harassment in general terms in Section 3 and while prescribing a penalty for harassment under Section 4 restricts the same to harassment committed at particular places.

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:18:01 +0530

Proceeding further, we find that under Sections 5 & 6, responsibilities are cast upon persons in charge of educational institutions, temple or other places of worship, cinema theatre or any other precinct and upon me crew or a public service vehicle or vessel. This Court considers it reasonable to hold that Section 4 of the Act was meant to deal with offences occurring in the places informed or in places of like nature. If not so read, the mention of the particular places in Section 4 would be rendered redundant and such could not have been the legislative intent. To put it differently, if the intent was to attract punishment for harassment at any and every place, Section 4 simply could have read as follows:

'4. Penalty for harassment of woman. — Whoever commits or participates in or abete harassment of woman in any place shall be punished………

7. In Kochuni v. States of Madras and Kerala, AIR 1960 SC 1080, it has been explained that the rule of 'ejusdem generis' was that when general words follow particular and specific words of the same nature, the general words must be confined to the things of the same kind as those specified. It was further observed that it is clearly laid down by decided cases that the specific words must form a distinct genus or category. It is not an inviolable rule of law, but it is only permissible inference in the absence of an indication to the contrary. In Lilavati Bai v. State of Bombay, AIR 1957 SC 521, it is informed that the rule of 'ejusdem generis' is intended to be applied where general words have been used following particular and specific words of the same nature on the established rule of construction that the legislature presumed to use the general words in a restricted sense, that is to say, as belonging to the same genus as the particular and specific words. Such a restricted meaning has to be given to words of general import only where the context of the whole scheme of legislation requires it. But where the context and the object and mischief of the enactment do not require such restricted meaning to be attached to words of general import, it becomes necessary to give a plain and ordinary

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:18:07 +0530

meaning".

Following the above reasoning, this Court in circumstances where the Trial Court found it necessary to alter charges under Section 216, Cr.P.C on the reasoning that the offending action of the Petitioner had not been committed in a public place, this Court would set aside the conviction passed by the Courts below….." என்று குறிப்பிட்டுள்ளது.

14. மேற்படி மாண்புமிகு உயர்நீதிமன்ற தீர்ப்புரையை இவ்வழக்கின் சங்கதிகளோடு பொருத்தி பார்க்கையில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சியத்தை நன்கு பரிசீலனை செய்கையிலும், அ.சா.1 புகாரில் 1, 2 எதிரிகள் சேலையை பிடித்து இழுத்தார்கள் என்றும், அவரது நீதிமன்ற சாட்சியத்தில் 2 வது எதிரி தனது சேலையின் தலைப்பு பகுதியை பிடித்து இழுத்தார் என்றும், மற்ற சாட்சிகளான 2 முதல் 5 வரையிலான சாட்சிகள் தங்களது நீதிமன்ற சாட்சியத்தில் 1 வது எதிரி அ.சா.1 ன் சேலையை பிடித்து இழுத்தார்கள் என்று சாட்சியமளித்துள்ளார்கள். மேலும் அ.சா.1 முதல் அ.சா.5 ன் நீதிமன்ற சாட்சியத்தினை பரிசீலனை செய்கையில் சம்பவ இடமானது புகார்தாரரின் வீட்டின் முன்பு வைத்து நடைபெற்றதாக அறிய முடிகிறது. எனவே மேற்கண்ட மாண்புமிகு உயர்நீதி மன்ற தீர்ப்பின்படி அ.சா.1 ன் சேலையை பொது இடத்தில் வைத்து 1, 2 எதிரிகள் பிடித்து இழுத்து அவருக்கு மானபங்கம் ஏற்படுத்தினார்கள் என்பதை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

JESU BALAN
Digitally signed by JESU BALAN
Date: 2026.04.27 16:18:14 +0530

**15.** 1, 2 எதிரிகளின் மீதான பாரதிய நியாக் சன்ஹிதா பிரிவு 131ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசுதரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என பரிசீலனை செய்கையில், அ.சா.1 தனது புகாரில் 1வது எதிரி தனது புடவையை பிடித்து இழுத்து கீழே தள்ளிவிட்டான் என்றும், 2வது எதிரி, அனுசியாவை நெஞ்சில் கை வைத்து தள்ளிவிட்டான் என்றும் கூறியுள்ளார். மேலும், அ.சா.1 நீதிமன்ற சாட்சியத்தில், 2வது எதிரி முகிலன் தனது சேலையின் மேல் தலைப்பு பகுதியை பிடித்து இழுத்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 தனது நீதிமன்ற சாட்சியத்தில் முகிலன் தனது மனைவியின் மார்பு பகுதியில் கை வைத்து தள்ளினார் என்றும் தனது அக்காவின் சேலையை பிடித்து இழுத்தனர் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.3 தனது நீதிமன்ற சாட்சியத்தில் 1 வது எதிரி கபிலன் கோமதியின் புடவையின் தலைப்பு பகுதியை பிடித்து இழுத்து தள்ளினார் என்றும், எதிரி–2 முகிலன் தனது இடது தோள்பட்டையில் கை வைத்து தள்ளினார் என்றும், தான் தனது 2 மாத குழந்தையை அந்த பக்கத்தில் தான் வைத்திருந்ததாகவும் அதனுடன் போராடியாதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.4 தனது நீதிமன்ற சாட்சியத்தில் தனது அம்மா கோமதியின் புடவையின் தலைப்பு பகுதியை பிடித்து இழுத்தார் என்றும், அப்போது எதிர் வீட்டின் குடியிருந்து வரும் தனது மாமா ராஜாவும் அவரது மனைவி அனுசியாவும் அங்கு வந்து ஏன் தனது அம்மாவை அடித்து தள்ளுகிறீர்கள் என்று எதிரிகளை கேட்டார்கள் என்றும் அதற்கு 2 வது எதிரி முகிலன் அ.சா.4ன் மாமி அனுசியாவின் நெஞ்சு பகுதியில் கையை வைத்து அடித்து

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:18:22 +0530

கீழே தள்ளினார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.5 தனது நீதிமன்ற சாட்சியத்தில் 1 வது எதிரி கபிலன் தனது மகள் கோமதியின் சேலையை பிடித்து உருவி விட்டார் என்றும் ராஜாவின் மனைவி அனுசியாவின் சேலையையும் கபிலன் உருவி நெஞ்சில் அடித்தார் அப்போது அனுசியா குழந்தையுடன் இருந்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**16.** பார்வை மகஜர் சாட்சிகளான அ.சா.6 மற்றும் அ.சா.7 ஆகியோர்கள் தங்களது நீதிமன்ற முதல் விசாரணையில், கடந்த 07.01.2025 ஆம் தேதி காலை 11.00 மணியளவில் வலங்கைமான் போலீசார் தயார் செய்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் கையொப்பம் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்கள். மேலும் அ.சா.6 எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணையில், தான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது எத்தனை பக்கங்கள் எழுதியிருந்தது என்று தனக்கு தெரியுமா என்றால் அதில் ஒரு பேப்பரில் எழுதியிருந்தது என்றும், ஒரு பேப்பரில் வரைபடம் வரைந்திருந்தது என்றும், தான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன தலைப்பில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் தனக்கு தெரியுமா என்றால் தனக்கு தெரியாது என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**17.** கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் அ.சா.8 புலன் விசாரணை அதிகாரியை குறுக்குவிசாரணை செய்யும்போது, இவ்வழக்கிலும் அ.சா.1 மற்றும் அ.சா.2 ன் மீது இந்நீதிமன்றத்தில் காவல் நிலைய குற்ற எண்.10/2025 வழக்கிலும், ஒன்றாக விசாரணை செய்து ஒரே நாளில் குற்ற

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:18:31 +0530

இறுதி அறிக்கை தாக்கல் செய்தேனா என்றால் ஒன்றாக விசாரணை செய்தேன், ஆனால் குற்ற இறுதி அறிக்கை வெவ்வெறு நாளில் தாக்கல் செய்துள்ளேன் என்றும் சாட்சியமளித்துள்ளார். மேற்படி அ.சா.8 ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில் இவ்வழக்கிலும் இவ்வழக்கிற்கான எதிர் வழக்கிற்கும் குற்ற இறுதி அறிக்கையானது ஒரே நாளில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்பது தெரிய வருகிறது. இருந்தபோதிலும் மேற்படி புலன் விசாரணையில் உள்ள குறைபாடானது இவ்வழக்கு முழுவதையும் பாதிப்பதாக அமையவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**18.** மேற்படி காயம்பட்ட சாட்சிகளான அ..சா.1 மற்றும் அ.சா.3 ன் சாட்சியத்தின் சாட்சிய வலிமை குறித்து பரிசீலனை செய்கையில்,

**State of madhaya Pradesh /Vs/ Mansingh and Ors** (2003(10) SCC Page 414) என்ற மாண்புமிகு உச்ச நீதிமன்ற வழக்கில், பத்தி, 9–இல்

**"The evidence of injured witnesses have greater evidentiary value and unless compelling reasons exist, their statements are not be discarded lightly"** என்று கூறப்பட்டுள்ளது.

மேற்படி உச்சநீதிமன்ற முன் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளதன்படி, இவ்வழக்கின் அ.சா.1 மற்றும் அ.சா.3 சாட்சியத்தை முரண்படுத்தும் விதமாக வேறு சாட்சியம் மற்றும் சாண்றாவணங்கள் ஏதும் இல்லை என்பதால் புகார்தாரரான அ.சா.1 ன் சாட்சியமும் அ.சா.3 ன் சாட்சியமும் நம்பதகுந்த மற்றும் வலிமையான சாட்சியமாக உள்ளதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:18:38 +0530

**19.** மேற்படி எதிரி தரப்பில் புகார்தாரரான அ.சா.1 ஐ குறுக்குவிசாரணை செய்தபோதும், அரசு தரப்பு வழக்கை முரண்படுத்தும் விதமாகவோ அல்லது அ.சா.1ன் சாட்சிய நம்பகதன்மையை இழக்கும் விதமாகவோ குறுக்குவிசாரணையில் எவ்வித சாட்சியமும் பெறப்படவில்லை. மேற்படி அ.சா.1ன் சாட்சியம் மற்றும் அ.த.சா.ஆ.1 புகார் மற்றும் அ.த.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை ஆகிய சான்றாவணங்கள் அ.சா.1ன் சாட்சியத்தை ஒத்துரைத்து காணப்படுகிறது.

20. மேலும் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 134 இல் வழக்கு சம்பவத்தை ஒரு சாட்சியை மட்டுமே வைத்து நிரூபிக்கலாம் என்று கூறப்பட்டுள்ளதையும், கருத்தில் கொண்டு, இவ்வழக்கின் 1, 2 எதிரிகள் அ.சா.1 மற்றும் அ.சா.3 ஐ அடித்து, அவர்கள் மீது குற்றமுறு வன்முறை பயன்படுத்தியதாக அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது. எனவே இவ்வழக்கில் 1, 2 எதிரிகளுக்கு எதிரான குற்றமான பாரதிய நியாக் சன்ஹிதா பிரிவு 131ன் கீழ் அரசு தரப்பில் தகுந்த சாட்சியம் மற்றும் சாண்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**21.** எனவே 1, 2 எதிரிகள் அ.சா.1 ஐ அடித்து அ.சா.1 ஐ காயப்படுத்தியதாக அ.சா.1ன் சாட்சியம் மற்றும் அ.த.சா.ஆ.1 புகார்வாக்குமூலமும், அ.த.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை ஆகிய சான்றாவணங்கள் மூலம் நிருபணம் செய்துள்ளதால், 1, 2 எதிரிகளின் மீதான பாரதிய நியாக் சன்ஹிதா பிரிவு

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:18:47 +0530

131ன் கீழ் குற்றம் இழைத்துள்ளதாக அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்துள்ளதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**22.** இறுதியாக 1, 2 எதிரிகள் பாரதிய நியாக் சன்ஹிதா பிரிவுகள் 296(பி), 351(3) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களுக்கெதிரான வன்கொடுமை தடுப்புச்சட்டத்தின் கீழ் குற்றவாளிகள் அல்ல என்று பாரதிய நாகரிக் சுரக்சா சன்ஹிதா பிரிவு 271(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. 1, 2 எதிரிகளின் மீதான பாரதிய நியாக் சன்ஹிதா பிரிவு 131 ன் கீழ் தண்டனை தீர்ப்பு வழங்கி பாரதிய நாகரிக் சுரக்சா சன்ஹிதா பிரிவு 271(2)ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது.

**23.** 1, 2 எதிரிகளுக்கு அளிக்கப்படவேண்டிய தண்டனை குறித்து பாரதிய நாகரிக் சுரக்சா சன்ஹிதா பிரிவு 271(2)ன் கீழ் வினவிய போது, 1, 2 எதிரிகள் கீழ்கண்டவாறு பதில் அளித்தார்கள்.

மன்னித்துவிடுங்கள் என்று கூறினார்

(எதிரியின் பதில் தனித்தாளில் எழுதப்பட்டுள்ளது)

**24.** 1, 2 எதிரிகள் அளித்த பதிலினை கவனமாக பரிசீலனை செய்ததில், 1 மற்றும் 2 வது எதிரிகளின் வேண்டுகோள், வழக்கின் தன்மை மற்றும் நீதியின் நலன் இவைகளைக் கருத்தில் கொண்டு, 1 மற்றும் 2 வது எதிரிகளின் மீதான u/s 131 of BNSS–ன் கீழான குற்றச்சாட்டு நிரூபனம் செய்யப்பட்டுள்ளதால், 1 மற்றும் 2 வது எதிரிகள் முதல் குற்றவாளிகள்

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:18:59 +0530

என்பதையும், அவர்கள் மீது எவ்வித முன் வழக்குகள் இல்லை என்பதையும், மேற்படி 1 மற்றும் 2வது எதிரிகள் குற்றவாளி நன்னடத்தை சட்டம் 1958 பிரிவு 4(1)ன் கீழ் விடுவித்து, பிரிவு 4(3) ன் கீழ் ஒரு வருட காலம் நன்னடத்தை அலுவலளரின் மேற்பார்வையில் இருக்க வேண்டும் என இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. மேலும் மேற்கண்ட ஒரு வருட காலத்தில் நீதிமன்றம் வேண்டும்போது, ஆஜராகி எதிரிகள் தண்டனையை பெற்றுக்கொள்வேன் என்றும், ரூ. 10,000/–ற்கு சொந்த பிணை முறி ஆவணம் ஏற்படுத்திக் கொடுக்க உத்தரவிடப்படுகிறது. மேலும் குற்றவாளிகள் கண்காணிப்பு சட்டம் பிரிவு 12 இன் கீழ் "பிரிவு 4 ன் கீழ் ஒருவர் குற்றவாளியாக காணப்பட்டு அதன்படி நடத்தப்பட்டால், அந்த குற்றவாளியாக காணப்பட்டு அதன்படி நடத்தப்பட்டால், அந்தக் குற்றவியல் தண்டனை காரணமாக ஏற்படும் தகுதி நீக்கத்திற்கும் அவர் உட்பட வேண்டிய அவசியமில்லை" என்பதனால் இவ்வழக்கின் 1 மற்றும் 2 வது எதிரிகள் 1 ஆண்டு காலம் நன்னடத்தை அதிகாரியின் கண்காணிப்பில் இருந்து வர வேண்டும் என்ற நிபந்தனையுடன் குற்றவாளிகள் காண்காணிப்பு சட்டம் பிரிவு 4(1) ன் கீழ் விடுவிப்பு செய்யப்பட்டாலும் அவர் வாக்காளராக இருப்பது அரசு வேலை அல்லது உரிமை பெறுவது போன்ற சட்டப்படி வரும் தகுதி நீக்கம் எதுவும் 2 வது எதிரியை கட்டுப்படுத்த இயலாது.

**25.** 1, 2 எதிரிகள் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு இந்நீதிமன்ற பிணையில் சென்றுள்ளார். 1, 2 எதிரிகளுக்கு தண்டனை ஏதும் வழங்காமல் நன்னடத்தை கண்காணிப்பு சட்டத்தின் கீழ் விடுவிப்பு செய்யப்பட்டுள்ளதால்

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:19:08 +0530

BNSS பிரிவு 468 ன் கீழ் உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்படவில்லை.

**26.** இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் ஏதும் இல்லை என்பதால் அதுகுறித்து உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்படவில்லை.

**27.** 1, 2 எதிரிகள் எழுதிக்கொடுத்த பிணைப்பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்க்கு பின்பு இரத்து செய்யப்பட வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்துப்பார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று, 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27 ஆம் தேதி திங்கள்கிழமை இந்நீதிமன்றத்தில் அவையறியப்பகரப்பட்டது.

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:19:17 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்.

**இணைப்பு**

**சாட்சிகளின் விபரம் அரசுதரப்பு சாட்சிகள்**

| தரவரிசை | பெயர் | வகை |
|---|---|---|
| அ.சா.1 | கோமதி | புகார்தாரர் |
| அ.சா.2 | ராஜா | Victim Statement |
| அ.சா.3 | அனுசியா | Victim Statement |
| அ.சா.4 | ப்ரித்தா | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.5 | சந்திரா | கண்ணுற்ற சாட்சி |

| | | |
|---|---|---|
| | | |
| அ.சா.6 | ரெகுபதி | பார்வை மகசர் சாட்சி |
| அ.சா.7 | விஜயகுமார் | பார்வை மகசர் சாட்சி |
| அ.சா.8 | சுப்பிரமணியன் | புலன் விசாரணை அதிகாரி |

**எதிரிகள் தரப்பு சாட்சி – இல்லை**
**நீதிமன்ற சாட்சி – இல்லை**

**சான்றாவணங்களின் விபரம்**

**அரசுதரப்பு சான்றாவணங்கள்**

| **வ.எண்** | **சான்றாவண எண்.** | **விபரம்** |
|---|---|---|
| 1. | அ.சா.ஆ. 1/அ.சா.1 | புகார் வாக்குமூலம் |
| 2. | அ.த.சா.ஆ.4/அ.சா.6 | பார்வை மகசரில் முதலாது கையொப்பம் |
| 3. | அ.சா.ஆ. 3/அ.சா.7 | பார்வை மகசரில் ,இரண்டாவது கையொப்பம் |
| 4. | அ.சா.ஆ. 4/அ.சா.8 | முதல் தகவல் அறிக்கை |
| 5. | அ.சா.ஆ. 5/அ.சா.8 | வரைபடம் |
| 6. | அ.சா.ஆ.6/ அ.சா.8 | பார்வை மகசர் |
| 7. | அ.சா.ஆ.7/ அ.சா.8 | சட்டப்பிரிவு மாற்றம் செய்த அறிக்கை |

**எதிரிகள் தரப்பு சான்றாவணம் – இல்லை**
**நீதிமன்ற சான்றாவணம் – இல்லை**

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:19:28 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்.

**<u>தீர்ப்புரையின் நகல் :</u>**

1. மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், திருவாரூர் அவர்களுக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

**<u>குறிப்பு</u>**

1. இவ்வழக்கின் முடிவு சம்பந்தப்பட்ட காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

2. இவ்வழக்கின் எதிரிகள் நீதிமன்ற விசாரணையின் போது பிணையில் இருந்தனர்.

3. சாட்சிகள் 3 வாய்தாவிற்கு மேல் அழைக்கப்படவில்லை. ர

4. எதிரிகளிமிருந்து தலா ரூ.1,000/– அபராதம் விதிக்கப்பட்டது

JESU BALAN
Digitally signed by JESU BALAN
Date: 2026.04.27 16:19:35 +0530